# நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**
சிறப்பு சார்பு நீதிபதி,
நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம்,
அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 27–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண் 118/2025**

**(CNR No. TN-RP-07-000-134-2025)**

**(அரக்கோணம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 172/2019)**

1. J. ரமேஷ், வயது 37, த/பெ.லேட்.பி.ஜெயகுமார்,
2. J. சுரேஷ்,வயது 37, த/பெ.லேட்.பி.ஜெயகுமார்,
   இருவரது முகவரி – எண்.27/61, டில்லியப்பன் தெரு,
   பழனிபேட், அரக்கோணம் தாலுக்கா, வேலூர் மாவட்டம். .. வாதிகள்

எதிராக

1. S. துரை கண்ணம்மாள் (காலமாகிவிட்டார்) **(**)**
   வயது 68, க/பெ.லேட்.சிவபிரகாசம்,
   எண்.5, செல்ல பிள்ளையார் கோயில் தெரு,
   டிரிப்ளிகேன், சென்னை – 600 005.
2. உமாலட்சுமி, வயது 38, க/பெ.லேட்.மோகன் பாபு, **(*)**
3. இளவர் ஜெகன், வயது 12, த/பெ.லேட்.மோகன் பாபு,
4. இளவர் தாரிகா, வயது 9, த/பெ.லேட்.மோகன் பாபு,
   2–4 பிரதிவாதிகளின் முகவரி – எண்16/5, புத்தர் தெரு,
   சொரக்காபாளயம், ஆவடி, சென்னை – 600 054.

3, 4 இளவர் பிரதிவாதிகளுக்காக அவர்களது

தாயாரான 2–ம் பிரதிவாதி உமாலட்சுமி

5. பாலசுப்பிரமணி, வயது 49, த/பெ.லேட்.சிவபிரகாசம்,

6. பானுமதி, வயது 47, த/பெ.லேட்.சிவபிரகாசம்,

7. சாந்தி, வயது 43, த/பெ.லேட்.சிவபிரகாசம்,

8. ஜெயபாரதி, வயது 39, த/பெ.லேட்.சிவபிரகாசம்,

5–8 பிரதிவாதிகளின் முகவரி – எண்.5,

செல்ல பிள்ளையார் கோயில் தெரு,

டிரிப்ளிகேன், சென்னை – 600 005.

9. விஜயலட்சுமி (காலமாகிவிட்டார்) ***(**)***

வயது 58, க/பெ.எம்.ஜானகி ராமன்,

10. மனோகரன், வயது 46, த/பெ.எம்.ஜானகி ராமன்,

11. தினகரன், வயது 38, த/பெ.எம்.ஜானகி ராமன்,

12. சதீஷ்குமார், வயது 34, த/பெ.எம்.ஜானகி ராமன்,

9–12 பிரதிவாதிகளின் முகவரி – எண்.73,

எழில் நகர், மணலி நியூ நகர்,

மணலி – 600 103.

13. ஜெயந்தி, வயது 52, க/பெ.லேட்.பி.ஜெயகுமார்,

14. ஜமுனா ராணி, வயது 39, த/பெ.பி.ஜெயகுமார்,

13, 14 பிரதிவாதிகளின் முகவரி–எண்.27/61,

டில்லியப்பன் தெரு, பழனிபேட்,

அரக்கோணம், வேலூர் மாவட்டம்.

15. இணை சார் பதிவாளர்–2,

அரக்கோணம், வேலூர் மாவட்டம். .. பிரதிவாதிகள்

***(*) இ.ம.வ. எண் 17/2022–ல் கடந்த 21.02.2022 அன்று பிறப்பித்த உத்தரவின்படி 2–ம் பிரதிவாதியின் பெயரையும், தாவா சொத்து விவரத்திலும் திருத்தம் செய்ய அனுமதிக்கப்பட்டு, வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.***

***(**)  இ.ம.வ. எண் 6/2025–ல் கடந்த 11.08.2025 அன்று பிறப்பித்த உத்தரவின்படி 1, 9 பிரதிவாதிகள் காலமாகிவிட்டதாக வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.***

தாவா சொத்துக்களை மூன்று சம பாகங்களாக பிரித்து, அவைகளை 1, 9, 13 பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பாகம் ஒதுக்கியும், வாதிகள் மற்றும் 14–ம் பிரதிவாதியின் தாயாரான 13–ம் பிரதிவாதிக்கு ஒதுக்கும் 1/3 பாகத்திலிருந்து, தலா 1/9 பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்க வேண்டி ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், தாவா சொத்தினை பொறுத்து பிரதிவாதிகள் எவ்வித பாராதீனமும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

| | | |
|---|---|---|
| இந்த வழக்கு தாக்கல் செய்த நாள் | : | 05.07.2019 |
| வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 06.07.2019 |
| வழக்கின் மதிப்பு | : | ரூ.28,73,000/–. |
| செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | : | ரூ.5030/– |
| நீதிமன்ற கட்டணச் சட்டம், பிரிவு | : | 37(2), 27 (c) |

| | | |
|---|---|---|
| வழக்குமூலம் ஏற்பட்ட நாள் | : | 12.11.2007, 17.01.2015, 03.06.2019. |
| வழக்குமூலம் ஏற்பட்ட இடம் | : | அரக்கோணம் டவுண்,<br>அரக்கோணம் தாலுக்கா. |

இவ்வழக்கானது கடந்த 05.07.2019 அன்று அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 06.07.2019 அன்று அந்நீதிமன்ற அசல் வழக்கு 172/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பின்னர் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, ராணிப்பேட்டை அவர்களின் 04.12.2024

தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவிடப்பட்டு, வழக்குக் கோப்புக்களை இந்நீதிமன்றம் பெற்ற பின்னிட்டு கடந்த 02.06.2025 அன்று இந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 118/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 23.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் S. வெங்கடேசன் மற்றும் Y.R. பார்த்திபன் ஆகியோர்கள் ஆஜராகியும், 1, 5 முதல் 14 வரை பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், 2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P. ராமமூர்த்தி மற்றும் G. ஆனந்தன் ஆகியோர்கள் ஆஜராகியும், 15–ம் பிரதிவாதி தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு. Y. பாபு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தையும், குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலித்தும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்பாணை</u>

இறுதியாக, பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், அதனடிப்படையில் பாகம் பிரித்துத் தர முன்வராவிட்டால் நீதிமன்ற ஆணையர் மூலம் பாகம் பிரித்து ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், தாவா சொத்தினைப் பொறுத்து எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரமும் கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில், மேற்படி பரிகாரங்கள் எதுவும் வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 27–ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்ற முத்திரையுடன் என் கையெழுத்திடப்படுகிறது.

(Sd/–. G. Yuvaraj)

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்.

**Schedule of Property**

Land and Building bearing Old Door No 25A, New Door No.40, situated in **Survey No.312/B, (Amended as per the order dated 21.02.2022 passed in I.A.No.17 of 2022 in O.S.No.172 of 2019),** (Punjai), Dilliyappan Mudali Street, Palanipet, Arakkonam Town, Arakkonam Taluk Joint II Arakkonam Sub Registration District. Arakkonam District. Vellore District consisting of Madras Terrace Roof Building bounded – on the northern side of Dilliyappan Mudali Street, on the Western side of Durai Mudaliar House, on the eastern side of Ezhumalai Mudaliar's wife Pounammal's House, on the Southern side of Sitheri Poramboke Land and the land meauring from east to west – 17 feet, north to south – 169 feet with Madras Terrace Roof building thereon measuring North to South – 22 feet, East to West – 17 Feet including land adjacent to the backside of the building (backyard) with well, electricity connection bearing Service Connection No.1346 and all electrical fittings thereon.

## Cost Memo Details

Cost memo not filed by both parties.

(Sd/–. G. Yuvaraj)

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்.

**<u>சி.சா.நீ.ம, அரக்கோணம்</u>**

**அ.வ. எண் 118/2025**

தீர்ப்பாணை

நாள் : 27.03.2026